பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 69

28.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற உதவி பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.பிரகாஷ், பரமேஷ்வரன், ஈஎல்கே கிராப்ட்ஸ் எண்டர்பிரைசஸ் என்னும் நிறுவனத்தை நாத்தக்கட்டு பிரிவு, தெக்கலூர், திருப்பூர் மாவட்டத்தில் நடத்தி வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிறுவனத்திற்கு உபயோகிக்கும் மின் இணைப்பை வணிக பயன்பாட்டிலிருந்து நுண்ணிய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் இணைப்பிற்கு மாற்றித்தருமாறு உதவி பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் லிமிடெட், தெக்கலூர் கிழக்கு அவிநாசி, திருப்பூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க திரு.இசக்கிமுத்து, உதவி பொறியாளர், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம் லிமிடெட், தெக்கலூர் கிழக்கு அவிநாசி, திருப்பூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.25,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். பின் லஞ்ச பணத்தை ரூ.25,000/-லிருந்து ரூ.15,000/- மாக குறைத்துக் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திரு.இசக்கிமுத்து, உதவி பொறியாளர் பொறிவைப்பு நடவடிக்கைக்கு முன்பு லஞ்ச பணம் ரூ.5,000/- முன்பணமாக பெற்றுக்கொண்டார். பிறகு பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.இசக்கிமுத்து, உதவி பொறியாளர், மீதமுள்ள ரூ.10,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 69
28.08.2026

ASSISTANT ENGINEER ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Prakash, running ELK Crafts Enterprises at Nathakattu Pirivu, Thekkalur, Tiruppur District. The complainant's company is availing electricity under commercial tariff. The complainant had applied for change of tariff from Commercial connection into Micro Small Medium Enterprises (MSME) connection at the office of the Assistant Engineer, Operation and Maintenance, TNPDCL, Tiruppur Distribution Circle, Thekkalur East, Avinashi, Tiruppur District. Tr.Esakimuthu, Assistant Engineer, TNPDCL, Tiruppur Distribution Circle, Thekkalur East, Avinashi, Tiruppur District, demanded a bribe of Rs.25,000/- from the complainant for processing his request. Later Tr.Esakimuthu, Assistant Engineer, reduced the bribe amount from Rs.25,000/- to Rs.15,000/- Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruppur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (28.08.2026). Today, before trap Tr.Esakimuthu, Assistant Engineer, received advance bribe amount of Rs.5,000/- and during trap proceedings, Tr.Esakimuthu, Assistant Engineer, received the remaining bribe amount of Rs.10,000/- from the complainant. The Assistant Engineer was arrested and remanded.